## அரசு மருத்துவமனைகளில்

# எரிவாயு (LPG) தட்டுப்பாடு ஏற்பட்டால் மாற்று ஏற்பாடுகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தல்!





சென்னை, மார்ச்.11-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (10.03.2026) சென்னை சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி திட்ட நிதி ரூ.1.15 கோடி மதிப்பீட்டில், மருத்துவ பயனாளிகளை கவனித்து கொள்பவர்களுக்கான காத்திருப்பு கூடம் திறந்து வைத்து, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்ட நிதியின் மூலம் இயன்முறை பயிற்றுனர் நியமிக்கப்பட்டு ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய இயன்முறை கருவிகள் தொடங்கி வைத்து, யோகா மற்றும் இயற்கை மருத்துவ பிரிவுக்கு 1 மருத்துவர் மற்றும் 1 மருத்துவ உதவியாளருடன் கூடிய சேவை தொடங்கி வைக்கப்பட்டது. பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

**சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் காத்திருப்போர் கூடம் திறந்து வைத்தல்**

சைதாப்பேட்டை அரசு மருத்துவமனை என்பது நூற்றாண்டை கடந்த பழமை வாய்ந்த மருத்துவமனை. இந்த மருத்துவமனையில் சோழிங்கநல்லூர், புழுதிவாக்கம், மடிப்பாக்கம் போன்ற பகுதிகளிலிருந்து இம்மருத்துவமனைக்கு வந்து பொதுமக்கள் சிகிச்சை பெற்று செல்கின்றனர். இம்மருத்துவமனை மிகப்பெரிய கட்டமைப்பை பெறாத நிலை என்பது இருந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு ரூ.34.90 கோடி மதிப்பீட்டில் 6 தளங்கள் கொண்ட மருத்துவக் கட்டமைப்பு கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் கடந்த செப்டம்பர் திங்கள் 8 ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது. 110 படுக்கைகள் கொண்ட இம்மருத்துவமனையில் தினமும் 1500 பேர் வரை மருத்துவ புறபயனாளர்களாக பயன் பெற்று வருகிறார்கள். இந்த மருத்துவமனையில் ஆண்டொன்றிற்கு 25,000 எக்ஸ்ரேக்கள் எடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நாளும் 60க்கும் மேற்பட்ட உள் மருத்துவ பயனாளர்கள் பயன்பெற்று வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு இம்மருத்துவமனையில் 14 புதிய டயாலிசிஸ் கருவிகள் சேவை தொடங்கி வைக்கப்பட்டது. மேலும் ரூ.2.50 கோடி செலவில் ஆக்ஜிஜன் ஜெனரேட்டர் கருவி, ஆட்டோ அனலைசர் கருவி மற்றும் அனலைசர் கருவி, கல்லீரல் மற்றும் சிறுநீரக நோய் கண்டறியும் பரிசோதனை மையம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் ஜுலை 2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. ரூ.2.50 கோடி செலவில் 14 டயாலிசிஸ் கருவிகள் 19.05.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது. மேலும் ரூ.1.20 கோடி செலவில் வென்டிலேட்டர் மற்றும் காது, மூக்கு, தொண்டை அறுவை சிகிச்சை உபகரணங்கள் 18.08.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

அந்த வகையில் இன்று ரூ.1.15 கோடி செலவில் (சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு நிதி), சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில், 2,152 சதுரடி பரப்பளவில் மருத்துவ பயனாளிகளை கவனித்துக் கொள்பவர்களுக்கான காத்திருப்போர் கூடம் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. மேலும் யோகா மற்றும் இயற்கை பிரிவுக்கு 1 மருத்துவர் மற்றும் 1 மருத்துவ உதவியாளருடன் கூடிய சிகிச்சை பிரிவு தொடங்கி வைக்கப்பட்டது. மேலும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்ட நிதியின் மூலம் இயன்முறை பயிற்றுனர் நியமிக்கப்பட்டு ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய இயன்முறை கருவிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

**கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை**

ரூ.447 கோடி செலவில், 6 தளங்கள், 6 இலட்சம் சதுரடி பரப்பளவில், 1000 படுக்கைகளுடன், சென்னை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை தொடங்கி வைக்கப்பட்டு, நவீன 1.5 டெஸ்லா MRI ஸ்கேன் கருவி, Double Balloon Endoscopy கருவி, நவீன இருதய கேத்லேப், அதிநவீன மருத்துவ உபகரணங்களுடன் கூடிய 10 அறுவை அரங்குகள், மற்றும் நவீன 3D மூறை அறுவை சிகிச்சை நுண்ணோக்கி, 2 அதிநவீன 3D Flat Panel DSA HIPEC கருவி மற்றும் அதிநவீன Bi-Plane மூளை, இரத்தநாள கேத்லேப் ஆய்வகம் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**தேசிய முதியோர் நல மருத்துவமனை**

ரூ.151.17 கோடி மதிப்பீட்டில் 3,76,358 சதுரடி பரப்பளவில் (8.64 ஏக்கர்), 200 படுக்கை வசதிகளுடன் தேசிய முதியோர் மருத்துவமனை தொடங்கி வைக்கப்பட்டு, யோகா மற்றும் இயற்கை மருத்துவ சேவை, 1.5 டெஸ்லா MRI ஸ்கேன் போன்ற உயர் மருத்துவ கருவிகளுடன் இயங்கி வருகிறது.

குழந்தை மருத்துவ முதுகலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்

ரூ.417.07 கோடி செலவில் சென்னை, கிண்டி, கிங் இன்ஸ்டியூட் வளாகத்தில், 750 படுக்கைகள், தரை மற்றும் 6 தளங்கள், 6.50 ஏக்கர் பரப்பளவில், 19 துறைகள் கொண்ட குழந்தை மருத்துவ முதுகலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவன கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**எரிவாயு (LPG) தட்டுப்பாடு தொடர்பான கேள்விக்கு**


இது தொடர்பாக நேற்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அனைத்து மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் அலுவலர்களுடான கூட்டத்தை நடத்தி எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டால் முன்னெச்சரிக்கையாக கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்த வாரத்திற்கு LPG தட்டுப்பாடு பற்றிய பிரச்சினை இல்லை. கடுமையான தட்டுப்பாடு வரும்பட்சத்தில் இதற்கு மாற்று ஏற்பாடாக எலக்ட்ரிகல் ஸ்டவ், கட்டை அடுப்புகள் போன்றவற்றை தயார் நிலையில் வைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதுவும் கூட மருத்துவமனைகளில் எந்த விதமான மருத்துவ பயனாளர்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்கின்ற காரணத்தினால் பால், பழம், ரொட்டி போன்ற உணவு பொருட்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. எந்த இடத்திலும் மருத்துவ பயனாளிகள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதில் இந்த அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக செய்து வருகிறது என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் கூடுதல் இயக்குநர் மரு.இராஜ்மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், இணை இயக்குநர் மரு. மலர்விழி, தலைமை மருத்துவர் மரு.தணிகாசலம், மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் ஸ்ரீதர், மோகன்ராஜ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

## திருச்சியில் இருந்து டெல்லிக்கு

# போர் முரசு கொட்டியிருக்கிறார் முதல்வர்!



திருச்சியிலிருந்து டெல்லிக்கு போர் முரசு கொட்டி இருக்கிறார் தமிழ் நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின். லட்சக் கணக்கான தொண்டர்களுக்கு ஒரு பேராசிரியராக வகுப்பு எடுத்தார். வரலாறுகளை நினைவூட்டினார்.

தொண்டர்களுக்காகவே நான் வாழ்கிறேன் என்று உள்ளம் திறந்து உணர்வுகளை கடத்தினார்.

அ.தி.மு.க. முகமூடியோடு பா.ஜ.க. தமிழ்நாட்டில் காலூன்ற முயற்சிக்கும் இந்த தேர்தல் களத்தில் உண்மையான எதிரி டெல்லிதான் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தி இருக்கிறார்.

மக்கள் மீதும் சாதனைகள் மீதும் அவர் வைத்திருக்கும் அசைக்க முடியாத ஆழமான நம்பிக்கைகளின் வெளிப்பாடுகள் அவரது உரையிலும் தெரிந்தது; உடல் மொழியிலும் தெரிந்தது!

தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளையும் அடையாளங்களையும் பண்பாடுகளையும் சிதைக்கத் துடிப்பவர்களே தமிழ்நாட்டு மக்களின் உண்மையான எதிரிகள் என ஒரு அடையாளம் காட்டிய முதல்வர் , நீங்கள் வெற்றி பெறப்போவது இல்லை என்பதையும் திட்டவட்டமாக தெரிவித்தார்.

மக்களை வழிநடத்திச் செல்லும் ஒரு தளபதி அதற்கேற்ப தனது தொண்டர்களை பக்குவப்படுத்தி தயார்படுத்தும் ஆற்றலையும் சக்தியையும் தந்திருக்கிறது முதல்வரின் திருச்சி பேருரை.

இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்தில் இருந்தும் ஒரு முதலமைச்சர், இப்படி டெல்லி ஆதிக்கத்தை எதிர்த்து போர்க் குரல் எழுப்பிய வரலாறு இல்லை.

**விடுதலை இராஜேந்திரன்**
திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர்



---

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! இரா.வீரமணி தலைமை!

# திரு.வி.க.நகர் தெற்குப் பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழா - ஆன்மிக அரங்கம்!

## சிவஞான பாலய சுவாமிகள் – பேரூர் ஆதினம், சாந்தலிங்க மருதாசல அடிகளார்,

## திருப்பெரும்புதூர் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜ்யகார்ய - அப்பன் உலகாரிய ராமானுஜ எம்பார் ஜீயர் சுவாமி புகழுரை!

சென்னை, மார்ச்.11-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், திரு.வி.க.நகர் தெற்குப் பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு "மனிதநேய விழா-38", இறையாண்மை முதல்வரின் கண்ணாகும்! எளியோர் உயர்வே திராவிட ஆன்மீகம்! எனும் தலைப்பில், மாபெரும் ஆன்மிக அரங்கம் 11.03.2026, புதன் கிழமை அன்று மாலை 5.00 மணியளவில், சென்னை, ஓட்டேரி, எஸ்.ஆர். பேலஸில் நடைபெறுகிறது.

இவ்ஆன்மிக அரங்கத்தில் விவசாய அணி அமைப்பாளர் இரா.வீரமணி தலைமை வகிக்கிறார். இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன், சரிதா மகேஷ்கமார் எம்.சி, இசட்ஆசாத் எம்.சி, புனிதவதி எத்திராசன் எம்.சி, டி.லோகேஷ், லயன்பி.உதயசங்கர், நா.துலுக்காணம், கே.ராஜ்முகமது, எம்.பெரோஸ்கான், பெரம்பூர்.ஆர்.மகேஷ், ரமணி லோகேஷ் எம்.சி, எஸ்.வெங்கடேசன், வி.கவெங்கடேசன், எம்.தமீம், தே.சுரேஷ்குமார் (எ) பொல்லுசுரேஷ், மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம்.இசட்.அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், பரிமளாசுரேஷ் பாபு முன்னிலை வகிக்கின்றனர்.

அ.சுரேஷ்குமார், எ.நெடுஞ்செழியன், எஸ்.சக்திவேல், மு.ரவிச்சந்திரன், வி.எஸ்.தியாகராஜன், எ.ராதாகிருஷ்ணன், ஜெ.கார்த்திகேயன், செங்கை சண்முகம், டி.பிரகாசம், டி.சுரேஷ், வெற்றிநகர், இ.சிவா ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் ஆன்மிக அரங்த்தில் - மயிலம் பொம்மபுர ஆதினம், சீர்வளர்சீர் சிவஞான பாலய சுவாமிகள், பேரூர் ஆதினம், சீர்வளர்சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளார், ஸ்ரீ பெரும்புதூர், ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜ்யகார்ய - அப்பன் உலகாரிய ராமானுஜ எம்பார் ஜீயர் சுவாமி ஆகியோர் புகழுரைக்கின்றனர்.

மேலும் இப்பொதுக் கூட்டத்தில், பெருநகர மாநகராட்சி மேயர்.ஆர்.பிரியாராஜன், டாக்டர். கலாநிதிவீராசாமி எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, என்.கிருஷ்ணமூர்த்தி, தமிழ்ச்செல்வி சசிகுமார் எம்.சி, மு.சரவணன் எம்.சி, ப.ரங்கநாதன், கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், பி.கே.மூர்த்தி எம்.சி, சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த், பரிதிஇளம்சுருதி எம்.சி, ஆர்.வரதன், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம்.தேவன், கூ.பீ.ஜெயின் எம்.சி, ஸ்ரீராமுலு எம்.சி, சொ.வேலு எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி, ஐ.சிஎப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, வே.வாசு, எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், எம்.டி.ஆர்.நாகராஜ், டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, வி.சுதாகர் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ் நன்றி கூறுகிறார்கள்.



ஈரோடு மொழிப்போர் காவலர் ஈரோடு மாவட்ட தி.மு.க அலுவலக நிர்வாகி ஈரோடு மாவட்ட இலக்கிய அணி தலைவர் மணி (எ) கே.பி.சுப்பரமணியம் தாம்பரத்தில் உள்ள மகள் வீட்டில் இயற்கை எய்தியதையொட்டி தகவலறிந்து மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., கழக இலக்கிய அணி இணை செயலாளர் ஈரோடு இறைவன் ஆகியோர் உடலுக்கு கழக இரு வண்ண கொடி போர்த்தி, மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். உடன் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வீ.கார்த்திக், வே.சிவசுப்பிரமணியம், ஆர்.தாமோதரன், டி.முருகன், எஸ்.மனோகரன் மற்றும் கழக தோழர்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

---

## இந்தியாவின் கூட்டாட்சியைச் சிதைத்து

# ஒன்றிய அரசு சர்வாதிகார ஆட்சி நடத்துகிறது!

## மக்களவையில் – கே.இ. பிரகாஷ் கண்டனம்!

புதுடெல்லி, மார்ச்.11-

VBGRAMG திட்டத்தின் மீது மாநிலங்கள் எழுப்பிய கவலைகளுக்கு எந்த மதிப்பும் இல்லை, இந்தியாவின் கூட்டாட்சியை சிதைத்து ஒன்றிய அரசு சர்வாதிகார ஆட்சி நடத்துவதாக மக்களவையில் கே.இ.பிரகாஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் பேசியது வருமாறு:

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டமான MGNREGA-வை நீக்கிவிட்டு, ஒன்றிய அரசு புதிதாக கொண்டு வந்துள்ள VBGRAMG திட்டம் குறித்து. நாடாளுமன்றத்தில் சில முக்கியக் கேள்விகளை எழுப்பினேன். இதில், இந்த புதிய திட்டம் பற்றி மாநிலங்கள் எழுப்பியுள்ள கவலைகள் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளதா, அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது போன்ற விவரங்களை கேட்டிருந்தேன்.

இதற்கு ஒன்றிய அரசு அளித்துள்ள பதில்கள், அவர்கள் மாநிலங்களின் கருத்துகளுக்கு சிறு மதிப்பையும் அளிக்க முன்வரவில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. மேலும், இந்த உதாசீனப்படுத்தும் தன்மை. இந்திய கிராமப்புற வளர்ச்சியின் மீது மிகமோசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்ற அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

1. மாநிலங்களுக்கு நிதிச்சுமையளிக்கும் 60:40 முறை மாற்றமுடியாது என ஒன்றிய அரசு திட்டவட்டம்:

VBGRAMG திட்டம் குறித்து மாநிலங்கள் எழுப்பிய முக்கியக் கவலை, முன்பு 100% ஒன்றிய அரசு அளித்துவந்த நிதி தற்போது 60:40 என்ற முறைக்கு மாற்றப்பட்டிருப்பது. இதை ஒன்றிய அரசை ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் மாநிலக்கட்சிகளே மறுபரிசீலனை செய்யச்சொல்லி வலியுறுத்தியிருந்தார்கள்.



ஆனால், தற்போது நாடாளுமன்றத்தில் அளித்துள்ள பதிலில், அத்தகைய கவலைகளை ஒன்றிய அரசு புறந்தள்ளியிருப்பது உறுதியாகியுள்ளது. தனது பதிலில் 'Cooperative Federalism' என்பதை பின்பற்றுவதாக கூறும் ஒன்றிய அரசு,

"மாநிலங்களின் கருத்தை கவனத்தில் எடுத்துள்ளோம். அவர்களுடன் விவாதிப்போம் என்று சொல்ல மனம் கொள்ளவில்லை.

இப்படி மாநிலங்களின் குரலை மதிப்பற்றதாக்குவது, கூட்டாட்சியோ, ஜனநாயக ஆட்சியோ அல்ல.

2 VBGRAMG என்பது முற்றிலும் புதிய திட்டம் 'முன்னோட்ட ஆய்வு (Pilot Study ஏன் செய்யவில்லை?

ஒன்றிய அரசு தனது பதிலில் மிகத்தெளிவாக MGNREGA காலாவதியாகி விட்டது. எனவே அதை நீக்கிவிட்டு VEGRAMG அறிமுகப்படுத்துகிறோம்' என்று கூறியுள்ளது. ஆகவே, இது முந்தைய திட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்ட ஒன்று அல்ல. முற்றிலும் புதிய திட்டம்

இப்படியிருக்க, இத்தகைய நீண்டகால இலக்கு கொண்ட பெரிய திட்டத்திற்கு 'முன்னோட்ட ஆய்வு' என்பது மிகமுக்கியமானது MGNREGA திட்டமானது முதற்கட்டமாக 2006ம் ஆண்டு 200 மாவட்டங்களில் அமல்படுத்தப்பட்டு, பின்னர் 2006ம் ஆண்டே இந்தியா முழுக்க செயல்படுத்தப் பட்டது. ஆனால், ஒன்றிய அரசு தன்னுடைய பதிலில் VBGRAMG க்கு அப்படி எந்த முன்னோட்ட ஆய்வையும் செய்யவில்லை என்று கூறியுள்ளது.

இது உணர்த்துவது ஒன்று தான். இந்த திட்டம் கிராமப்புற முன்னேற்றத்தின் மீதான அக்கறையோடு மேம்பாடுகளுடன் கொண்டுவரப்பட்ட திட்டமல்ல. மாறாக, ஒன்றிய அரசு தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக கொண்டுவந்த அவசரத் திணிப்பு திட்டம்.

3. Demand Driven to Supply Driven கிராமப்புற மக்களின் வேலைவாய்ப்பு உரிமை பறிப்பு:

MGNREGA திட்டம் அதனுடைய Demand Driven மற்றும் Rights Based Design ஆகிய இரண்டு காரணங்களுக்காக உலகப்புகழ் பெற்றது அதாவது. இதில் தேவை அடிப்படையில் மக்கள் தங்களுக்கான வேலையை உரிமையுடன் கேட்டுப்பெற முடியும். ஆனால், ஒன்றிய அரசின் புதிய VBGRAMG, இதை Supply Driven-ஆக மாற்றியுள்ளது. இதன் படி மக்களுக்கான வேலைகளை அதிகாரிகளே தீர்மானிப்பார்கள்.

இது பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்கு எந்தப் பதிலையும் நேரடியாக அளிக்காமல் ஒன்றிய அரசு தவிர்த்துள்ளது. இதன் மூலம், கிராமப்புற மக்களின் ஒரு முக்கியமான உரிமையை பறித்திருப்பதை, எந்த குற்ற உணர்ச்சியும் இல்லாமல் ஒன்றிய அரசு நியாயப்படுத்தியுள்ளது.

4. இயற்கைப் பேரிடர் உள்ளிட்டவற்றால் பாதிக்கப்படும் மாநிலங்களுக்கு விதிவிலக்கு என நாடகம்:

நிதிப்பகிர்வு முதல் மக்களின் அடிப்படை உரிமை வரை அனைத்தையும் பறித்துவிட்டு, இயற்கைப் பேரிடர் உள்ளிட்டவற்றால் பாதிக்கப்படும் மாநிலங்கள், சில விதிவிலக்குகளை இந்த திட்டத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என ஒன்றிய அரசு கூறியுள்ளது. இது அப்பட்டமான கண்துடைப்பு அம்சம்.

இந்த அரசின் Track Record-யை எடுத்துப் பார்த்தோமென்றால், வரிப்பகிர்வு நிதி. திட்டங்களுக்கான நிதி, பேரிடர் நிதி என எதுவும் மாநிலங்களுக்கு முறையாக அளிக்கப்படவில்லை. மாநில முதலமைச்சர்கள் சட்டமன்றத் தீர்மானம் முதல், பிரதமருக்கு கடிதம் வரை பல முயற்சிகளை எடுக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட சூழலில், இந்த விதிவிலக்கு அம்சத்தை எந்த விதத்தில் மாநிலங்களும் அதன் மக்களும் நம்ப முடியும்?

மேலும், இந்த விதிவிலக்குகள் குறித்த துல்லியமான வரையறை எதையும் பதிலில் ஒன்றிய அரசு குறிப்பிடவில்லை. வேலை நாட்கள் உயர்த்தப்படுமா கூடுதல் நிதி வழங்கப்படுமா... இது போன்ற எந்த துல்லியமான வரையறை எதுவுமே இல்லை.

ஒன்றிய அரசு VBGRAMG திட்டத்தில் மாநிலங்களின் கவலைகளுக்கும் கருத்துகளுக்கும் மதிப்பளித்து திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியது மிக அவசியம் அப்படியில்லை என்றால், இந்திய கிராமப்புறங்களின் வளர்ச்சியில் மிகப்பெரிய தடையை ஒன்றிய அரசின் இந்த ஆணவம் ஏற்படுத்தும்!

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.